விலை 20/-

"இதயம் இயங்காவிடின் மனிதம் இயங்க முடியாது"
"உழைப்பவர் இயங்காவிடின் உலகமே இயங்க முடியாது"

# இதயநாதம்

இதயம் : 01 | ஆடி - 2008 | பக்கங்கள் : 10 | நாதம் : 2

பொதுசன நூலகம்
28 SEP 2008
யாழ்ப்பாணம்

# விவசாயிகள் பாதிக்கப்படுவதால் தாமும் தொழில் வாய்ப்பை இழப்பதாக உழைப்பாளர்கள் கவலை தெரிவிப்பு

## சமூக அறிவியல் களஞ்சியத்திலிருந்து...

உலகமய (மாய) மாகிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் யார் மிகக் கெட்டிககாறர்களோ . அவர்களே! பிழைக்க முடியுமென்பது தெற்கு நாடுகளின் அனுப வம். இந் கெட்டிக்காரத்தனத்தில் நல்லதனத தின் வாடையேயில்லை. ஒருவர் கழுத்தை மற்றொருவர்அறுக்கும் (Cut Choroatism) போட்டிக்கும சுயநலத்துக்கும் மட்டுமே இங்கு இடமுண்டு . இலாபம் மட்டுமே இங்கு புனித மானது.

குடாநாட்டில் விவசாய உற்பத்தி நட வடிக்கைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதால் அத்துறையில் தொழில்வாய்ப்பை கொண்டுள்ள உழைப்பாளர்களும் பாதிக்கப படுகின்றார்கள் என்று உழைப்பகள்கள் கவலை தெரிவிக்கின்றனர். தற்போது குடாநாட்டில் மரக்கறிகளின் விலை வீள்ச்சி அடைந்துள் ளது. முன்னதாகவே பல இழப்புக்கள் மத்தியிலும் தமது விடாமுயற்சியிலும் கடின உழைப்பாலும்,விவசாயத்தை முற்று முழு தாக கைவிட்டு விடாது கடன்பட்டு எரி பொருள், கிரிமிநாசினி, உரம் போன்றவற்றின் அதிக விலை ஏற்றங்களை பொருட்படுத்தாது எப்படியாவது இலாபத்தை பெற்றுவிடலாம் என்ற நப்பாசையும் பெருத்த எதிர் பார்ப்புடனும் விவசாய உற்பத்தியில் ஈடு படுகின்றனர் இருந்தபோதும் விவசாயிகளின் எதிர்பார்ப்பு ஏமாற்றத்திலேயே முடிகின்றது. இதில் சாதாரண விவசாயிகளின் நிலை மிக வும் கவலைக்கிடமானதாகும்.

விவசாயிகள் இப்படி பாதிக்கப்பட்டால் தமக்கும் தொழில் வாய்ப்பு இல்லாமல் போய் விடும் என்று உழைப்பாளர்கள் தெரிவிக்கும் அதேவேளையில் ஏற்கனவே தொழில் பற் றாக்குறையால் திண்டாடுகின்றோம். என்றும் ஏ9 பாதை திறந்திருந்த போது நாங்கள் நல்ல உழைப்பு உழைச்சோம் தோட்ட சாமான கள் வெளியூருக்கு போனதால் தோட்டக் காரர்கள் நல்ல லாபம் அடைஞ்சார்கள். எப்ப பாதை பூட்டப்பட்டதோ அண்டைக்குப் புடிச்ச சனியன் எங்களைவிட்டு தொலையுதே இல்லை என்று தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் அதேவேளையில் அண்மையில் ஏற்பட்ட கால நிலை சீரின்மையால் விவசாய உற் பத்தியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரைக்கும் எவ்வித நிவாரனங்களோ, மானியங்களோ வளங்கப்படவில்லை. என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. இது செம்மண் பிரதேச உற்பத்தியாளர் களுக்கு தொடர்ச்சியாக இருந்துவரும் குறை பாடென்றும் இந்த நடைமுறையில் மாற்றத் தைக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைப்பதுடன் இதற்கு சம்மந் தப்பட்ட அதிகாரிகள் முலம் தீர்வு கிடைக் குமா? என்ற கேள்வியும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தரப்பில் எழுப்பப்பட்டுள்ளது.

# உழைப்பாளர்கள் நசுக்கப்படுகின்றனர்

## இதயநாதம் வெளியீட்டு விழாவில் நடராஜா



கடந்த 28-05-2008 இல் இதயநாதம் பத் திரிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரையை நிகழ்த்திய முன்னாள் அதிபரும் யாழ்.தினக்குரலின் முகாமையாளருமான R.C.நடராஜா அவர் கள் தெரிவித்ததாவது.

இன்றைய நிகழ்வை ஒரு மகிழ்சிகரமான நிகழ்வாகக் கருதுகிறேன். கிராமிய உழைப் பாளர் சங்கம் தொடர்பான பின்னணி அதனை

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஆழ்கடல் மீன்பிடிக்கு தடை! மீனவர்கள் விசனம்!!

## நிவாரணம் வழங்கவேண்டுமென அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்.குடாநாட்டில் அமுல்படுத்தப்படும் கடல் வலயச் சட்டம் காரணமாக ஆயிரக் கணக்கான கடற்றொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பொன்னாலை தொடக்கம் தொண்டை மானாறு வரையான குடாநாட்டின் கரையோ ரப் பிரதேசங்களை அண்டிவாழும் கடற்றொழி லாளர் குடும்பங்கள் இக்கடல்வலயச் சட்டம் காரணமாக பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங் களின் சமாச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்றொழிலாளர்கள் தொழில்புரிவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவான கடல் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றபோதும்

(3ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் அதிகார பூர்வ ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதயம் இயங்காவிடின் மனிதம் இயங்க முடியாது"
"உழைப்பவர் இயங்காவிடின் உலகமே இயங்க முடியாது"

# இதயநாதம்

## சங்கத்தின் தனித்துவம்

தற்போது மக்களிடையே அறிமுகமாகியுள்ள 'இதயநாதம்' பத்திரிகையானது, உழைக்கும் கிராமிய மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் செயற்பட்டுவரும் கிராமிய உழைப்பாளர் சங்கத்தினால் வெளியிடப்படுவது வாசகர்கள் மற்றும் யாவரும் அறிந்த ஒன்றாகும்.

இருப்பினும் இப்பத்திரிகை குறித்தும் சங்கம் குறித்தும் பல சந்தேகங்கள், ஐயப்பாடுகள் சிலரிடம் இருப்பதை தெரிந்து கொள்ளமுடிகின்றது. இன்னொரு சாரார் தமக்கு எழும் சந்தேகங்களை கேட்டுக்கொள்கின்றார்கள். இதன்பொருட்டு யாவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்ற காரணத்தால் சங்கம் மற்றும் 'இதயநாதம்' பத்திரிகை குறித்த உண்மை நிலையை ஆசிரியர் பக்கத்தில் முதன்மைப்படுத்துகின்றோம்.

கிராமிய உழைப்பாளர் சங்கம் ஒரு நீண்ட வரலாற்றுப்பின்னனியைக் கொண்டது. ஆண்கள், பெண்கள் உட்பட கூலிவறிய விவசாயிகள் வறிய மக்கள் மற்றும் இதர தொழிலாளர்கள் மட்டத்தில் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் ஐக்கியத்திற்காகவும் உழைப்பதை நோக்கமாக கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு செயற்பட்டு வரும் சங்கம் தனித்துவம் என்ற கொள்கையை முன்நிறுத்தி எந்தவொரு கட்சியினதும் நிதி நிறுவனங்களினதும் தலையீடோ அவர்களின் சார்பு நிலையோ இன்றி கிராமிய உழைக்கும் வறிய மக்களின் நலனுக்காக இவர்களின் சார்பு நிலையில் மட்டுமே நின்று செயற்பட்டுவருகின்றது.

அதேவேளை சங்கம் தனது நோக்கத்தை இழந்து போகாத வகையில் கொள்கையில் நேர்மையான வழிநின்று எந்த நிதி நிறுவனத்திடமோ அல்லது கட்சிகளிடமோ உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான கோரிக்கைகள், பொருளாதார ரீதியான நலன்களை உயர்த்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்வைக்கும். இவ்வாறு முன்வைக்கப்படும்போது சங்கத்தின் சுயாதீனம், கொள்கை என்பவற்றிற்கு அமைய உடன்பாடு எட்டப்படாதபோது எந்த ஒரு அமைப்புடனான உறவும் தொடர்பும் தவிர்த்துக்கொள்ளப்படும்.

அத்துடன் கிராமிய உழைப்பாளர் சங்கம் தனித்துவம் என்பதை திட்டவட்டமாக நிலை நிறுத்திக்கொள்வதற்கு இன்னொரு முக்கிய காரணம் உண்டு. அதாவது பல மதத்தவர்களாகவும் பல நிறுவனங்களுடனும் பல அரசியல் கட்சிகளுடனும் மக்கள் தொடர்புபட்டிருப்பதால் சங்கம் தனித்துவம் என்ற கொள்கையை உறுதியாக கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. ஏனெனில் இக்கொள்கையில்தான் உதிரிகளாய் உள்ள கிராமிய உழைக்கும் மக்களின் ஐக்கியமும் பலமும் அடங்கியுள்ளது. அத்துடன் இந்த மக்களின் நலன்சார்ந்த நிகழ்வுகள் மற்றும் பொது வேலைத்திட்டங்களை முன்னெடுப்பவர்களுடன். சங்கத்தின் நோக்கம் கொள்கையின் பொருட்டு இணைந்து செயற்படும். இவ்வாறு செயற்படும் இச்சங்கம் ஒரு பதிவு செய்யப்பட்ட அமைப்பாக செயற்பட்டு வருகின்றது. இத்தகைய பின்னணியைக் கொண்ட அமைப்பினாலேயே இதயநாதம் பத்திரிகை வெளிக்கொண்டு வரப்படுகின்றது. இந்த வகையில் இப்பத்திகை குறித்த உண்மை நிலையையும் சங்கத்தின் நடைமுறையையும் அதன் தாற்பரியத்தையும் வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் எனநம்புகின்றோம்.

## பெரும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் பாதுகாப்பு வலயம் உள்ளது. அங்கும் விவசாய நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுள்ளது என நான் கூறிநேன்.

நன்றி:
வீரகேசரி

பலாலி விமான நிலையத்தில் நாம் சிங்களவர் என்று தெரிந்தவுடன் எம்மை உள்ளே அழைத்து அமர்வதற்கு கதிரை கொடுத்தார்கள் எமக்கு மாத்திரம் ஏன் இச்சலுகை என அங்கு காத்திருந்த மக்கள் வியப்படைவதை உணரமுடிந்தது" என்றார்.

### வடக்கு மக்களின் துன்பங்கள் தெற்கிலுள்ளோருக்குத் தெரிவதில்லை

ஹர்மன்குமார உரையாற்றுகையில் வடக்கிலும் தெற்கிலுமுள்ள விவசாய சங்கங்கள் மீனவ சங்கங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் எமது முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளன. கடந்த ஒகஸ்டில் நாம் யாழ்ப்பாணத்திற்கு சென்றபோது இத்தகைய சங்கத்திற்கு ஓரளவு ஆதரவு இருந்தது. ஆனால் கடந்த மார்ச் மாதத்தில் அங்கு சென்றபோது அவர்கள் தயக்கம் தெரிவித்தனர். இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட சில சம்பவங்கள இதற்கு காரணமாக இருக்கலாம்.

வடக்கு மற்றும் கிழக்கிலும் தெற்கிலும் உள்ள கீள்மட்டங்களிடையே தொடர்பை ஏற்படுத்துவது மிக முக்கியமானதாகும் இபபோது குண்டுகள் வெடிக்கின்றன மக்கள் கொலலப்படுகின்றனர். கொழும்பில் இடம்பெறும் குண்டுவெடிப்புக்கள் எமக்குத்தெரிகின்றன. ஆனால், வடக்கில் மக்கள் கொல்லப்படுவது எமக்கு தெரிவதில்லை. அரசியல் தீவொன்று ஏற்பட்டால்கூட இருபுறமும் உள்ள கீள்மட்ட சாதாரன மக்களிடையே உறவு ஏற்படாவிட்டால் முழுமையான பலன் கிட்டாது என்றார்.



அண்மையில் சங்குவேலி ஸ்ரீ அம்பாள் முன்பள்ளியில் இடம்பெற்ற மழலைகளின் விளையாட்டு நிகழ்வின் ஒரு காட்சியினையும் முன்பள்ளியின் ஆசிரியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலம்.

## மாணவர் பகுதி

### பொது அறிவு

1.முதல் முதல் மனித இனம் எந்தக்கண்டத்தில் தோன்றியது? ஆசியாக்கண்டத்தில
2."சாத்தானின் வேதங்கள்" என்ற நூலை எழுதிய உலகப்புகழ் பெற்ற இந்திய ஆங்கில எழுத்தாளர் யார்? சல்மான் ருஷ்டி
3.உலகில் பெண் ஜனாதிபதியாக இருந்த நாடுகள் எவை? இலங்கை, இந்தியா, பாகிஸ்த்தான.
4.இலங்கையில் முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியர் யார்? சுவாமி விபுலானந்தர்
5.நீச்சலில் உலகசாதனை புரிந்த 15வயது இளைஞன்? குற்றாலீஸ்வரன்
6.முதன் முதலில் ஆங்கில அகராதியை எழுதியவர்? நோஹ்லெப்ஸ்டர்
7.பிறவிச் செவிடரான மேல்நாட்டுச் சங்கீதக்காரர்? பிதோவன்
8.கவியரசு கண்ணதாசனின் இயற்பெயர்? சா.முத்தையா
9.ஈழத்தில் எழுந்த முதல் பள்ளுநூல் எது? குதிரமலைப் பள்ளு
10.தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் யாது? தோல்காப்பியம்

**இதயநாதம் அனைத்து இதயங்களிலும் இடம்பிடித்து இன்னும் வளர்ந்து சரித்திரம் படைக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.**

**கணேசன் தர்சிகா - தரம்: 9**
*யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியலையம்*

**பொது அறிவு சார்ந்த விடயங்கள் மற்றும் கல்வி தொடர்பான ஆக்கங்களை அனுப்ப விரும்பும் மாணவர்கள் 'இதயநாதம்', மாணவர் பகுதி, சேச் அருகாமை, குப்பிளான் தெற்கு, புன்னாலைக்கட்டுவன எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தங்கள் ஆக்கங்கள் உடனுக்குடன் பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலயத்தில் ஒரு மாற்றம்

இமாலய இந்துராட்சியம் குடியரசாகும் வரலாற்றுப்பதிவு இவ்வாண்டு நிகழ்ந்திருப்பது நேபாளியருக்கு மகிழ்ச்சியான செய்தியாகும். ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் முடியாட்சிக்கு புரட்சிகர மாவோஸ்டுக்கள் முடிவுகட்டியுள்ளனர் மன்னர் ஞானேந்திரா அரசமாளிகையைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். புதிய அத்தியாயத்தை தலைவர் பிரசன்டா எழுதிக்கொண்டிருக்கிறார். இமாலய அரசின் அனுபவம் ஏனைய தென்னாசிய நாடுகளுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே புதிய பாடமாக மாறிவருகின்றது.

23.6மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக்கொண்ட நேபாளப் பிரதேசம் நிலமானிய ஆதிக்கத்தைக் கொண்ட அரசாக திகழ்ந்து வந்தது. நகரங்களை மையப்படுத்திய பிராமாணியத்தின் முதன்மையும், மத்திய தரவர்க்கத்தின் நலன்களை மட்டுமே கொண்ட ஆட்சி 'மக்கள் போர்' (people war) என்ற மாவோஸ்டுக்களின் மக்கள்படை அமைப்பால் முடிவுக்கு வந்துள்ளது. 1996 களில் ஆரம்பித்த 'மக்கள் போர்' நடவடிக்கை மாவோஸ்டுக்களின திட்டமிட்ட நகர்வினாலும் அணிதிரடலினூடாகவும் சாதகமான மாற்றத்தை எடடியுள்ளது.

சீனப்பாணியில் புரட்சியை நகர்த்திய மாவோஸ்டுக்கள் நம்பிக்கை தரக்கூடிய மக்கள் அதிகாரக் கட்டமைப்புக்களையும் பொருளாதார தேவைகளையும் நிறைவு செய்யும் கிராமிய உழைப்பை மையப்படுத்திய செயற்பாடுகளும் அதன் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகியது. வர்க்கப்பகமைகள், சாதி, இன, மத, பகமைகள், பெண்கள் உரிமைகள், தனிமனித விடுதலைக்கான வழிமுறைகள, கல்வி, சுகாதாரம் வேலைவாய்ப்பு என பல திட்டங்களை கம்யூனிஸப்பார்வையில் இலகு படுத்தி செயற்படுத்தியது. இதனால் மக்கள் படையின் பணிமட்டுமல்லாது நேபாளிய மக்களும் ஆயுதப் போராட்ட அமைப்புக்கும் நெருக்கமான உறவு ஏற்படக்காரணமாகயது.

முடியை எதிர்த்தல், மிலேட்சத்தனமான ஆட்சியை எதிர்த்தல் என்பவற்றுக்கப்பால் கிராமங்களை இணைத்துக்கொண்டு நகரத்தை முற்றுகையிடும் பாணியிலேயே மாவோஸ்டுக்கள் செயற்பட்டனர். இது ஏறக்குறைய சீனப்புரட்சிபோன்றது. அறுபது வருடங்களுக்குப்பின்பும் அதே பாணியில் ஒரு புரட்சி வென்றிருக்கிறது. சீனாவின் ஆதரவும் இந்திய இந்து முடி அரசுமீதான எதிர்ப்பிற்க்கு காரணமாக அமைந்ததுடன் இந்தியாவின் தோல்வியும் சீனாவின் எழுச்சியுமே நேபாள மாவோஸ்டுக்களின் எழுச்சியை அளவீடு செய்யவேண்டும்.



நேபாளிய மாவோஸ்டுக்களின் மக்கள் அதிகாரத்திற்கான போர் தெளிவான வரன்முறையைக் கொண்டிருந்தது. குறிப்பாக பிரதேச சுயாட்சி அமைப்புமுறை, விவசாயக் கூட்டுறவு கம்யூன்கள் சுதந்திரமும் பிரதேச இயல்புங்கொண்ட நீதித்துறையின் சேவை என்பவற்றுடன் பெண்கள் பின்தங்கியவருக்குரிய சமத்துவ உரிமைப் பிரகடனங்கள் என விரிவான செயற்பாட்டைக் கொண்டு இயங்கி வருகிறது. இதுவே இப் புரட்சியின் இன்னொரு காரணமாகும்.

கிராமங்களை உள்ளூர் இராணுவத்திடமிருந்து மீட்டெடுக்கும் கொரில்லா பிரிவுகள் கைப்பற்றிய நிலப்பிரதேசத்தை ஏற்கனவே தயார் செய்யப்பட்ட இரண்டாவது நிலைப்பிரிவிடம் கையளித்துவிட்டு வேறு பிரதேசம் நோக்கி நகரத்தொடங்கும். இவ்வாறு மேற்கு நேபாளம், பின்பு கிழக்கு நேபாளம் என விரிவடைந்து படிப்படியாக முழுப்பகுதியையும் மாவோஸ்டுக்கள் கைப்பற்றிய வரலாறு பதிய பரட்சிமாதிரியாக உள்ளது. மேலும் அத்தகைய மாதிரி தெளிவான கம்யூனிஸப் பாணியிலானதாக தயாராகி பின்பு ஜனநாயக கட்டமைப்பை நோக்கியதாக அமைந்துள்ளது. 2007 ஏப்ரலில் நடைபெற்ற தேர்தலில் மாவோஸ்டுக்கள் நேபாளத்தை தெளிவான ஜனநாயக தளத்துக்கு நகர்த்தியுள்ளதைக் காண முடிகின்றது.



நேபாளத்தின் புவியியல் அமைப்பு எப்போதும் கொரில்லா போர்முறைக்கு சாதகமாகவே உள்ளது. 1960களிலிருந்து இந்தியாவும், அமெரிக்காவும் நேபாளத்தின் மீதான கடடுப்பாட்டினை மேலாதிக்கத்தினை ஏற்படுத்த முயன்ற தோடு பல பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொண்டுவந்தன. மக்கள் யுத்தம் ஆரம்பித்த மேற்கு நேபாளத்தில் இரண்டு நாடுகளும் மக்களின் வறுமையைக்கட்டுப்படுத்தவும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் பலதிட்டங்களை கொண்டுவந்தன. ஆனால், அவை பெருமளவு மாவோஸ்டுக்களின் நகர்வுக்கு முகங்கொடுக்க முடியாது தகர்நது போனது. இறுதியில் முடியாடசிக்கு முண்டு கொடுக்கும் வகையில் இராணுவ, பொருளாதார உதவிகளை இந்தியாவும் அமெரிக்காவும் வழங்கிவந்தன. வறுமை இந்த நாட்டுக்கு மீளமுடியாத துயராகவுள்ளது. இதுவே மாவோஸ்டுகளுக்கு இருக்கப்போகும் சவாலாகும். வறுமை தகரும் பட்சத்தில் மாவோஸ்டுக்களை தகர்க்க முடியாது என்பதோடு நேபாளம் தென்னாசிய அரசியலில் புதியதோர் ஆரம்பமாக அமையும். எல்லை நெடுகலும் இந்தியாவுடனும், சீனாவுடனும் அதிகாரப் பிரச்சனையை எதிர்காலத்தில் எதர்கொள்ளவேண்டிய நிலை மாவோஸ்டுக்களுக் உண்டு.

நேபாளத்தின் அமைவிடம் இயல்பாகவே கொண்டிருக்கும் அரசியல்பலம் மாவோஸ்டுகள் ஆட்சியிலும் ஆபத்தைக்கொண்டதாக மாறலாம். அத்தகைய மாற்றம் மீளவுமொரு குடிமாதிரி ஆட்சிக்கு வழிவகுக்க வாய்ப்புக்கள் உண்டு. அது இரண்டு விதத்தில் மாவோஸ்டுக்களுக்கு பொருந்தும்

**சர்வதேசியன்**

மலையும், அது சார்ந்த பிரதேசமும் நிரந்தரமான ஒரு அரசியல்கலாச்சாரத்தை தன்னகத்தே கொண்டிருக்கிறது. அத்தகைய புவிசார் அரசியல்பலம் ஆதிக்கத்தை வெளிப்படுத்த தயாராகிவிடும்.

இரண்டாவது கம்யூனிசப்பாணியிலான புரட்சிகள் சில தனிமனிதன்களால் சர்வாதிகாரமான ஆட்சிக்கு நகர்த்திடுவது இயல்பானது. அத்தகைய அனுபவம் உலகத்தில் எடுபடுமோ தெரியவில்லை. ஆனால், நேபாளத்தில் அதற்கான வாய்ப்பு அதிகமானது.

எனவே, பிரசண்டாவுக்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கும் புதிய அனுபவத்தை மட்டுமல்ல சவால் மிக்க எதிர்காலத்தை நோக்கி நேபாளம் நகரவுள்து.

## ஆழ்கடல் ...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

இடையிடையே கடலில் இடம் பெறும் கடற்சமர்கள் காரணமாக முற்றாகத் தடைவிதிக்கப்படுவதால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அன்றாடம் தொழில்புரிந்துவரும் கடற்றொழிலாளர் குடும்பங்கள் தாம் ஒருநாள் தொழிலுக்குப் போகவில்லை. என்றால் ஜீவனோபாயம் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் கவலை வெளியிடுகின்றனர்.

இவ்வாறு, பாதிக்கப்படும் கடற்றொழிலாளர் குடும்பங்கள் தமது தொழிலுக்கு சீரான அனுமதி கிடைக்கும் வரை தமக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டுமெனவும் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கின்றனர். தற்போது பரவைக் கடலில் மட்டுமே மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படுவதாகவும் ஆழ் கடலில் மீன்பிடிப் பதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் தமது வருமானம் பெரிதும் வீழ்ச்சி கண்டிருப்பதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கணைகள்



## எழுவோம்

கூனிக்குறிகி கும்பிடு போட்டு
எத்தனை காலம்
எங்களை மாய்ப்பது.
வறுமைச் சக்கரங்களில்
வாழ்க்கையை ஓட்டி
வாழ்வது!
ஏங்களின் வாழ்க்கையா ?
சிறுமை எமக்கு சீதனமா ?
அடிமையே எங்கள்
வாழ் நிலையா ?
ஏழையின் நலனதை
ஏழனமாய் பார்த்திடும்
அடக்குமுறையாளர்கள்
கோடரிக் காம்புகளுடன்
முதலாளி வர்க்கத்திற்க்கும்
முடிவுரை எழுதிட.
உழைக்கின்ற மனிதன்
வயிறாற உணவுண்ண
முடியாத போது!
ஏய்க்கின்ற மனிதன்
சுகபோக வாழ்வில்.
பாமர மக்கள் சுகம் காணுமொரு
காலத்தை மாற்றிட
தொழிலாளர் நாமெல்லாம்
எழுவோம் அணியணியாய்.

மு.சந்திரகலா. யோகபுரம்

## உரிமைக்காக

உழைக்கும் கர
ங்கள்யாவும்
ஒன்று சேர்ந்து
உலகுக்கோர் சிந்துபாட
எம்தலைவிதியை நாம் பாட
நாளுக்கு நாளாய் பொருள் விலையேற
நாமோ கண்ணீரக்கவி பாட
எத்தனை நாளாய் நாம்
இப்படியே பல்லவி பாட
எமக்கென்ற ஓர்நாளில்
நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து
எம் உரிமைக்காய்
ஒரே குரலில் உலகிற்கு
பறை சாற்றிடுவோம்
வாருங்கள் அனைவரும் ஒன்றாய்

த.சித்திரா, தெல்லிப்பளை

## எதிர்பார்ப்பு

தேகம் தேய நாள் முழுவதும்
உழைத்து சரியான கூலியை
எதிர்பார்க்கும் தொளிலாளி.
கணவன் வரவை எதிர்பார்க்கும்
பட்டினி தத்தெடுத்த
பத்தினியும் பிள்ளைகளும்.
தொழிலாழி வரவை எதிர்பார்க்கும்
வட்டிக்கடன் காரன்.
எல்லோரது எதிர்பார்ப்பும்
தவிடுபொடியாய்!..
என்றுமே வென்றுவரும்
ஈரலை எரிக்கும் கசிப்பு
கசிப்பால் வயிறு நிரப்பி
நடனமாடும் கால்களுடனும்
வேலியிடம் சண்டைபோடும்
கைகளுடனும்
வீடுவந்த குடிகாரத்தொழிலாழி
அவனறிவானா?
வீட்டில் இருக்கும் அடுப்பில்
பூனை குட்டிபோட்டிருப்பதை
ஏன்றுபோல் இன்றும்
எல்லோருடைய எதிர்பார்ப்பும்
தவிடுபொடியாய்!
எப்போது உணர்வான் தன்
குடும்பத்தின் எதிர்பார்ப்பை
எப்போது திருந்திடுவான்?
பார் புகழும் தொழிலாழியாய்.

**மானியூர் சி-நிரோஷன்**

## சொந்தமண்ணில் சொந்தமாய்

**கல்லை உடைத்து**
**களனிகள் படைத்து**
**செழிப்பாக்கினோம் மண்ணை**
**இன்று!**
**இடம்பெயர்ந்து**
**வளம் இழந்து**
**செழிப்பிழந்து**
**நாதியற்று ஏதிலிகளாய்**
**சொந்த மண்ணில்**
**சொந்தமாய் தொழில் செய்து**
**ஒரு நேரம் உண்டாலும்**
**உரிமையோடு உண்டதில்**
**கண்ட மகிழ்ச்சிக்கு அளவேது**
**குடிசைக்குள் ஆச்சி**
**குரக்கன் பிட்டவித்து**
**சுறாக்குழம்புடன் மரவள்ளிக்கிழங்கும்**
**பிசைந்தடிக்க பக்குவமாய்**
**பகிர்ந்திடுவாள்.**
**அக்காள் தங்கை அண்ணன் தம்பி**
**ஆச்சி அப்பு உறவினர் என்று**
**குளிர்ந்த நிலவில்**
**கூடிமுற்றத்தில் குசலங்கள் பேசி**
**முகம்மலர உண்டு கழித்த காலமது**
**இன்று!**
**கொடிபிடித்து கனதடவை**
**வந்துபோயினம் கனபேர்**
**உருப்படியாய் ஒன்றுமில்லை.**
**முகாம் அடையாளமும்**
**அகதி அந்தஸ்த்துமே!**
**மிச்சமாய் உள்ளது.**
**அரைவயிற்றுக்கும் கால்வயிற்றுக்கும்**
**தீர்வுதராத பயிற்சிகளும் கூட்டங்களும்.**
**நிரந்தரமாய் தீர்வு வந்தால்**
**தீர்ந்திடுமே! துயர்கள்யாவும்** -*இன்பம்* -

## அடம்பன் கொடியும்

**பளிபட்டுப் பகைகொண்டு பண்பற்ற நடப்பொன்று**
**பலகாலம் தொடர்ந்தேறு**
**வளியெங்கு தெரியாமல் வாழ்வாங்கு புரியாமல்**
**வருங்காலம் இருளாகுதே**
**விளிதன்னைக் குருடாக்கி விரைகின்ற பயணத்தால்**
**விலையில்லா உயிர் மாளுது**
**மொழியென்று இனமென்று மோதியதன் விளைவாலே**
**மோசங்கள் தான் எஞ்சுது**

**விடிவென்று எழுந்த எம் விளைநெஞ்சர் பாதையிலே**
**வீணாகிப்போகும் காலம்**
**முடிவொன்று இல்லாமல் விற்றிடும் குரோதத்தால்**
**முறையற்ற வாழ்வின் ஓலம்**
**படிகின்ற பகையாலே பலதூரம் செல்கிறதோ**
**பண்பான நேசக்கோலம்**
**முடிகின்ற மூச்சாலே முகாரிகள் கேட்டு இனி**
**முனைந்திடு ஒற்றுமைப் பாலம்**

**பழிமாறிச் சுடுபட்டு பலமாக நெரிபட்டு**
**பலமற்றுச் சாகலாமோ?**
**குழிதோண்டி எமக்கு நாம் குரூரத்தின்போக்காலே**
**குதூகலம் கொள்ளலாமோ?**
**இளிகூலப் பண்பதனால் இருள்தானே நீடிக்கும்**
**இரங்காயோ இளையோனே நீ**
**வளி நன்கு இணைவுற்று வருநாளில் திடம்கொண்டு**
**வாழ்ந்தாலே ஒளிமீதமே!**

**- மானியூர் ரட்ணேஸ்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் வருமா?



சிறுகதை

குயிலினங்களின் இனிய கானம காற்றுடன் கலந்தது சேவல்களின் கூவல் ஒலியுடன் இணைந்து காலைப்பொழுதின் புலர்வை தெரிவித்தன.

இருளின் கனதிக்குள் அகப்பட்ட ஊர்மனைகள் சூரிய பகவானின் பொற்கரங்களின் ஒளியால் மெல்ல மெல்ல புலப்படத் தொடங்கின வழமை போன்றுதான் அன்றைய பொழுதும் விடிந்தது. ஆனால், மனிதமனங்களில் மட்டும் வன்மமான இருள்பரவத்தொடங்கியது.

ஏ-9 பாதை பூட்டப்பட பொருளாதாரத்தடை என்ற கோர அரக்கனின் பிடி யாழ்குடாநாட்டு மக்களின் தொண்டையில் இறங்கியது. கடைபரப்பியிருந்த அத்தியவசியப் பொருட்களெல்லாம் மர்மமாய் மறைந்தன முதலாளி வர்க்கங்கள முழு வேகத்துடன் செயற்பட்டன ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் மக்களின் சீவியம் போராட்டமாய்போனது. வேலைக்குச் செல்ல முடியவில்லை. கடைகளுக்குச் சென்று உணவுப் பொருட்களை வாங்க முடியவில்லை. பொருட்களின் விலை பல மடங்காக உயர்ந்துசென்று கொண்டிருந்தது. விற்கும் பொருட்களை சாதாரண மக்களால் வாங்க முடியாத நிலை. மக்கள் பசி, பட்டினியை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் வேளையில் வர்த்தக முதலாளிகளும் ப.நோ.கூ.சங்க ஊழியர்களும் கள்ள விலையில பொருட்களை விற்பதிலும் பொருட்களை பதுக்குவதுமான பெரும் மோசடிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

வறுமையின் பிடிக்குள் யாழ் குடாநாடு முழுவதும் மூழ்கிக் கொண்டிருந்தது பணக்கார முதலைகளுக்கும் பச்சோந்திகளுக்கும் இது அவ்வளவு பாதிக்கவில்லையாயினும் எத்தனை நாள்தான் உணவுப்பொருட்கள் கையிருப்பாக இருக்கும் பொருட்களின் இறக்குமதி தடையாகிப்போனால் பிறகு ரூபா நோட்டையா தின்ன முடியும் வறுமைக்கு யாருமே தப்பமுடியாத நிலை உருவெடுத்தது.

பாயில் சுருண்டு படுத்திருக்கும் தேவகியின் கண்களில் இருந்த கண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது. வறுமையின் கோரம் தேவகியின் குடும்பத்தை நெருக்கி மூச்சுத்திணற வைத்தது மூன்று பிள்ளைகளின் வயிறும் ஒட்டி உலர்ந்துபோய் அந்தப்பசிக் களையினாலேயே உறங்கிக்கிடந்தார்கள் கூலிவேலைக்குச்சென்று பிள்ளைகளை வளர்க்கும் தேவகியால் இன் நிலையை எத்தனை நாள்தான் சமாளிக்கமுடியும். ஏழையாக இருந்தாலும் கணவனுடனும் மூன்று பிள்ளைகளோடும் சந்தோசமாகத்தான் வாழ்ந்தார்கள. யுத்தமெனும் சூறாவளியால் அவளது வாழ்க்கை நிர்க்கதியானது. சோதனைகளும் வேதனைகளும் ஏழைகளுக்கு இறைவன் கொடுக்கும் கொடைகள். வாழ்க்கையில் எந்த இனிய சந்தோசங்களையும் அனுபவித்திராத அவளது பிஞ்சுக் குழந்தைகள் மூன்றும் பட்டினியால் பரிதவித்துக் கிடந்தன. பெற்ற வயிறல்லவா எப்படிப்பொறுக்கும் ஈரத்துணியை தன்வயிற்றில் சுற்றிக கொண்டு தன் பிள்ளைகளுக்கு பசிபோக்கும் தாய்மையை எந்தப் பட்டினியாலும் சாகடிக்க முடியாதல்லவா. இந்த ஏழைகளின் உயிர் வாழ்வு சில முதலாளி வர்க்கங்களுக்கு ஏளனமாய் தென்பட்டது எப்படியாவது பட்டினியிலிருந்து தன் பிள்ளைகளைக்காத்துக் கொள்ள வேண்டும். என்ற வேகத்துடன் இரண்டுநாள் வேலைக்குச் சென்றாள். ஆனால், இரண்டு நாளும் தேவகியின் சம்பளப்பணம் கொடுக்கப்படவில்லை. வெட்கத்தை விட்டு கேட்டபோதும் அவள் தூசிக கப்பட்டதே தவிர அவளது வ தப்பரிதாப உணர்வை அந்த முதலாளி புரிந்துகொள்ளவில்லை. அந்த வேளையில் அவளது எதிர்பார்ப்பு நியாயமானதும் அவசியமானதும்கூட இருந்தபோதும் அதை மதிக்கும் மனிதம் மனிதர்களிடம் மரணித்துவிட்டது ஏமாற்றத்துடன் வீட்டுக்கு வந்து பசியால் வாடியிருக்கும் பிள்ளைகளின் முகத்தைப் பார்க்க சகிக்காது துடிக்கின்ற அவளது தாய்மை உணர்வை வார்த்தைகளில் வர்ணிக்கமுடியவில்லை எங்காவது கடன்பட்டு ஒரு நேரக்கஞ்சியாவது ஊற்றலாம் என்றால் எங்கு போவது இந்த நேரத்தில்.

“தனியொரு மனிதனுக்கு உணவில்லை என்றால் , ஜெகத்தினை அழித்திடுவோம்” என அன்று பாரதி பாடிய வார்த்தைகள் இன்று யாழ். குடாநாட்டில் எத்தனை மனிதர்கள் உணவின்றிக் கிடக்கிறார்கள். இந் நிலை தேவகி வீட்டில் மட்டுமல்ல பெரும்பாலான வீடுகளிலும் இதே நிலைதான். மெல்ல மெல்ல இருள கவியத்தொடங்கியது அப்போது தான் தேவகிக்கு விளக்கு கொழுத்தவேண்டும் என்ற நினைவு தட்டுப்பட்டது. எழுந்து சென்று விளக்கை எடுத்து திரியை சரியாக்கினாள். ஆனால், விளக்கில் மண்ணெண்ணெய் இல்லை. திரியில் ஊறியிருந்த ஈரலிப்பை நம்பி தீக்குச்சியை தட்டி விளக்கில் பற்ற வைத்தாள். அவளது நம்பிக்கை வீணாகவில்லை. விளக்கு மெதுவாக கண்சிமிட்டியது. அப்போது பக்கத்து வீட்டு சொர்ணம் தேவகியை கூப்பிடும் குரல்கேட்டு வெளியில் வந்தாள் தேவகி சொர்ணத்தின் கையில் சிறிய பை ஒன்று இருந்தது. தொண்டை காய்ந்து துவண்டுபோயிருந்த தேவகியினால் பேசமுடியவில்லை. வாய்திறந்தால் அழுகை வந்து விடுமோ என்ற அச்சத்தினால் என்ன என்பதுபோல் சொர்ணத்தை பார்த்தபடி நின்றிருந்தாள் தேவகி. சொர்ணம் கொண்டு வந்த பையை தேவகியின் கையில திணித்தாள். இந்தா தேவகி இதில் இரண்டு பேணி அரிசி இருக்கு பிள்ளைகளுக்கு ஏதேனும் செய்து கொடு. அதுகள் இரண்டு நாளாக பசியில் கிடக்குதுகள் என சொர்ணம் சொல்லிக்கொண்டு இன்னொரு விசயத்தை போட்டுடைத்தாள். தேவகி முதலாளி வீட்டுக்கு வந்தவர் என சொர்ணம் வார்த்தையை முடிப்பதற்குள் சொர்ணமக்கா முதலாளி காசுகொண்டந்தவரே என தேவகியின் கேள்வி ஆவலுடன் வெளிவந்தது. சொர்ணம் சொன்ன பதிலால் மீண்டும் களையிழந்து போனாள் தேவகி. இல்லையடி அவா காசுக்கு அவசரப்படாத ஆட்களை வேலைக்கு கூட்டிக்கொண்டு வரட்டாம். அதுதான் நாளைக்கு நீ வேலைக்கு வந்தால் காசுக்கு அவசரப்படுவாய். நாளைக்கு நீவேறெங்கயாவது வேலைக்கு போறதென் டால் போவன். உன்ர நிலமை எங்களுக்குத் தெரியும். பணக்கார முதலாளிகளுக்கு தெரியுமோ? தேவகி நொருங்கிப்போனாள். யாருக்குமே மனிதாபிதமானம் என்பது இல்லையா? சரி நான் வாறன் போட்டு என சொர்ணம் விரைந்தாள். சொர்ணம் சென்ற திசையையே வெறிததபடி நின்ற தேவகிக்கு கையில் இருந்த அரிசி நினைவுவர வீட்டுக்குள் நுளைந்தாள். அந்த நேரத்தில் சொர்ணம் கொடுத்த அரிசி மணிகளுக்கு நன்றி சொல்வதா? அவள் சொல்லிப்போன செய்திக்காக வருத்தப்படுவதா? மனம் குழம்பிப்போனாள். பிள்ளைகளின் பசி போக்கக் கிடைத்த அந்த அரிசி மணிகளுக்காக சொர்ணத்துக்கு மனசுக்குள் நன்றி செலுத்திக் கொண்டு உணவு தயாரிக்க ஆயத்தம் செய்தாள். பசியால் துடித்த பிள்ளைகளின் முகங்கள் அவள் மனதை அலைக்கழித்தது. எப்படியாவது அவர்களின் பசியை போக்கிவிடவேண்டும் என்ற ஆதங்கத்தில் வேகமாக கஞ்சி சமைத்தாள். சமைத்து முடித்து பிள்ளைகளை எழுப்பி சாப்பிட வரும்படி அழைத்தாள். தூக்கக் கலக்கத்திலும் அவர்களின் முகங்களில் தெரிந்த சந்தோசம் தேவகியின் நெஞ்சைக் குளிரவைத்தது. தன் பிள்ளைகளுக்கு பசிபோக்குவதின் சந்தோசம் வேறெதுக்கும் ஈடாகாது. அந்தவேளையில் அந்தக்கஞ்சி நான்கு ஜீவன்களுக்கும் அமிர்தமாகவே இருந்தது. அம்மா பசிக்குது பசிக்குது என்று கேட்விட்டு பின்எதுவுமே கிடைக்காது என்ற ஏமாற்றத்துடன் உறங்கிப் போன பிஞ்சுத்தளிர்கள் தாயின் உபசரிப்பினால் மீண்டும் புத்துயிர் பெற்று பிரகாசித்தன.

மு.சந்திரகலா
யோகபுரம்

இது இன்று இரவு மட்டும்தான் நாளைய பொழுதை எவ்வாறு எதிர் கொள்வது என்ற மனப் போராட்டம் மீண்டும் தேவகியின் மனதை குடைய ஆரம்பித்தது. ஏழைகள் அவர்களுடைய எல்லாத்தேவைகளையும் போராடியே பெறவேண்டும் என்பது எழுதப்படாத விதி. தினமும் வறுமையில்வாடும் அவாகளால் இந்த திடீர் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியவில்லை. பாலுக்கழும் குழந்தைக்குக்கூட பாலூட்ட தாயின் மார்பில் பாலில்லை. ஏனெனில், வறுமை அவள் உதிரத்தைத் தின்று உயிர் வாழ்வதால்.

இதெல்லாம் இங்குயாருக்குத் தெரியும் ஏழைகளின் கண்ணீர் தண்ணீருக்குள் மீன் அழுவதைப் போலல்லவா இருக்கிறது. இந்த ஏழைகளுக்கு எப்போது தான் விமோசனமோ? விடியப் போகும் பொழுதை எண்ணிக் கொண்டே தேவகி உறங்கிப் போனாள் பொழுது விடியும் இவர்களின் வாழ்வு விடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⇨ மீன்பிடிக்க கட்டுப்பாடு ⇨ சந்தை வாய்ப்பில்லை
⇨ விவசாயத்திற்கு உரமில்லை
⇨ பாதுகாப்புக் கெடுபிடி

# பெரும் அவலத்தில் யாழ்.மக்களென இங்கு வந்து சென்ற தென்பகுதி தொண்டரணி தெரிவிப்பு!




*சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத் திக்குமான மக்களுக்கிடையிலான கலந்துரை யாடல் வலையமைப்பு கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அதன் அங்கத்தவர் பத்மா புஸ்பகாந்தி உரையாற்றுவதையும் த.ரோஸ்மேரி, ஹர்மன்குமார, ஏ.ஜேசுதாசன், கே.பி.சோமலதா, சரனபால டி சில்வத்த ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.*

மீன்பிடித்தலில் கட்டுப்பாடு, விவசாயத்திற்கான உரங்களின்மை, சந்தை வாய்ப்பின்மை, பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக யாழ்ப்பாண மக்கள் மிகுந்த துயரங்களுக்கு முகம் கொடுத்துவருவதாக சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்திக்குமான மக்களுக்கிடையிலான கலந்துரையாடல் வலையமைப்பு எனும் தொண்டர்நிறுவனப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். தென்னிலங்கையை தளமாகக் கொண்ட இத்தொண்டர் அமைப்பினர் கடந்த மார்ச் மாத இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்து பெற்ற அனுபவங்கள் தொடர்பாக விளக்குவதற்காக அண்மையில் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

அவ்வமைப்பின் தேசியஇணைப்பாளர் A.யேசுதாசன் இதுகுறித்து கூறுகையில், "ஏ-9 பாதை மூடப்படுவதற்கு முன்னர் நாம் அடிக்கடி வடக்கிற்கு சென்றுவந்தோம். அதன்பின் பலதடவை விமானம் மூலம் சென்றோம். வடக்கு மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை தென்னிலங்கை மக்களுக்கு தெரியப்படுத்துவதே எமது நோக்கமாகும். 2007ஆம் ஆண்டு ஆகஸ்டில் வடக்கிற்கு சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியபின் அங்குள்ள விவசாய சங்க பிரதிநிதிகளை கடந்த ஒக்டோபர் மாதம் தென்னிலங்கைக்கு வரவழைத்தோம். பின்னர் கடந்த மார்ச் மாத இறுதியில் மீண்டும் நாம் யாழ்ப்பாணத்திற்குச் சென்றுதிரும்பினோம்.

"தேசிய மீனவ ஒத்துழைப்பு" இயக்கத்தின் அமைப்பாளர் ஹர்மன்குமார, "சவிஸ்தரி" அமைப்பின் பிரதான செயலாளர் பத்மா புஷ்பகாந்தி "சவிஸ்திரி" அமைப்பின் மொனராகலை மாவட்ட இணைப்பாளர் கேபி. சோமலதா, 'ஐக்கிய தொழிலாளர் அமைப்பின்' செயலாளர் சரணபாலடிசில்வா, மக்களுக்கிடையிலான கலந்துரையாடலின் உதவி இணைப்பாளர் த.ரோஸ்மேரி ஆகியோரும் நானும் இவ்விஜயத்தில் கலந்துகொண்டோம்.

இவ்விஜயத்தின்போது மக்கள் படும் துன்பங்கள் பலவற்றை நாம் நேரில் கண்டுணரக் கூடியதாகவிருந்தது. அவ்வாறே அரசாங்கம் மற்றும் ஊடகத்துறை ஊடாக தென்னிலங்கைக்கு பெற்றுக்கொடுக்கும் பொய்யான தகவல்களின் உண்மையான நிலையையும் கண்டறியக்கூடியதாகவிருந்தது. என்றார்.

### வேறொரு நாட்டிற்கு செல்வதைப்போன்ற அனுபவம்

பத்மா புஷ்பகாந்தி உரையாற்றுகையில் பயண ஆரம்பத்திலிருந்தே வேறொரு நாட்டிற்கு செல்வதைப்போன்ற அனுபவம்தான் எமக்குக்கிட்டியது நாம் சென்ற பிரதேசங்களில் மீனவ விவசாய குடும்பங்கள் அதிகம் ஏ9 பாதைமூடப்பட்டுள்ளதால் தமது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பின்றி அவர்கள் துன்பப்படுகிறார்கள் ஏனைய பொருட்களை வாங்குவதற்கு அவர்களிடம் பணமில்லை. பெண்கள், சிறார்கள் மந்தப்போசாக்குடன் காணப்படுகிறார்கள்.

இரவில் ஊரடங்குச்சட்டம் அமுல்ப்படுத்தப்படுவதால் நோயாளிகளை வைத்திய சாலைக்கு அழைத்துச்செல்வதற்கும் மக்கள் சிரமப்படுகின்றனர். எமது குழுவில் உள்ள சகோதரி ஒருவர் யாழ்ப்பாணத்தில் வைத்து திடீர் சுகையீனம்முற்றதால் அவரை வைத்திய சாலைக்கு அழைத்துச்செல்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினோம் யாழ்ப்பாணமக்கள் அனுபவிக்கும் துன்பங்களை நேரில் உணர்ந்துகொள்ள அதுவாய்ப்பாக அமைந்தது.

நாம்சந்தித்த பெண்கள் யுத்தமின்றி வாழும் நிலையை ஏற்படுத்தித்தருமாறு கோரினார்கள். அவர்கள் மிகுந்த அச்சத்துடன் காணப்படுகிறார்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை தெரிவிக்க அவர்கள் அஞ்சுகின்றனர் என்றார்.

### தெற்கு மக்களுக்கும் இதேநிலை வரக்கூடும்

சரணபால டி சில்வத்த உரையாற்றுகையில் : குப்பிளான் தெற்கு விவசாய சங்கப் பிரதிநிதிகளை நாம் சந்தித்தோம். கண்ணீருக்கு மதத்தியில் அவர்கள் தமது துன்பங்களை கூறினர். அவர்களின் துன்பத்திற்கு பிரதான காரணம் ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளமையாகும் பயிர்ச்செய்கைக்கு போதிய உரவகைகள் கிடைப்பதில்லை.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும் சந்தை வாய்ப்பில்லாததால் விற்பது கடினமாகவுள்ளது. 1கிலோ வாழைப்பழத்தை 3ரூபா விற்கே விற்கவேண்டியிருப்பதாகவும் பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ளகாணிகளில் விவசாயம் செய்ய முடியாத நிலை இருப்பதாகவும் அவர்கள் கூறினர் வேறுபொருட்களை வாங்குவதற்கு அவர்களிடம் போதிய பணமின்றி வாடுகிறார்கள்.

சுமார் 1700 மீனவர்கள் உள்ள பிரதேசங்களில் கடலில் மீன்பிடிப்பதற்கு தினமும் சுமார் 400 பேருக்கு மாத்திரமே பாதுகாப்புப்படையினரால் அனுமதி வழங்கப்படுகிறது. அதுவும் குறிப்பிட்ட தூர எல்லைக்குள் மாலை மூன்று மணிவரையே மீன் பிடிக்கமுடியும். கரைக்கு வரத்தாமதமானால் கடுமையாக தண்டிக்கப்படுகிறார்கள். இதனால் அப்பிரதேச மீனவர்களின் எண்ணிக்கையையும் அவர்கள் பிடிக்கும் மீனின் தொகையையும் கருத்திற் கொண்டால் ஒரு மீனவருக்கு நாளாந்தம் சராசரியாக 440கிராம் மீன்தான் கிடைக்கின்றது. அதன் பெறுமதி சுமார் 145ரூபா. இந்தப்பணத்தில்தான் தமது அடுத்ததவணை வரும்வரை அவர்களின் குடும்பத்தினர் சாப்பிடவேண்டும்.

இத்துன்பங்களுக்குக் காரணம் யுத்தம் தான். எனவே இந்தயுத்தத்திற்கு தீர்வு காண வேண்டும். இல்லாவிட்டால் தற்போது வடக்கு மக்கள் அனுபவிக்கும் நிலையை தெற்கு மக்களும் அனுபவிக்கும் நிலை வரலாம் என்றார்.

### மீனவ குடும்பங்களின் வாராந்த வருமானம் 290 ரூபா

த.றோஸ்மேரி உரையாற்றுகையில் : எமது நாட்டின் ஒரு பகுதியிலுள்ள எமது சகோத ரிகளும் அவர்களின் பிள்ளைகளும் மிகுந்த துன்பங்களுக்குமத்தியில் வாழ்வதை கண்டு மனம் வருந்தினோம். முன்பள்ளியில் உள்ள இளம் சிறார்கள் பாடல் பாடுவதற்குக்கூட பயப்படுகிறார்கள் இராணுவத்தினர் செல்லும் போது வீதியில் செல்வதற்குகூட அச்சிறார்கள் அஞ்சுகிறார்கள்.

அங்குள்ள குடும்பங்களுக்கு வாரத்திற்கு 2நாள்தான் மீன் பிடிக்கமுடியும். அதாவது அவர்களின் வாராந்த வருமானம் சுமார் 290 ரூபாதான். மந்த போசணையும் அதிகம் கற்றல் பணியை முன்னெடுப்பதற்கும் அவர்கள் சிரமப்படுகிறார்கள். பாடசாலைகளில் தளபாடங்கள் கற்றல் உபகரணங்களுக்கும் பற்றாக்குறை உள்ளது பிள்ளைகளிடம்தான் எமது நாட்டின் எதிர்காலம் உள்ளது. தெற்கிலும் வடக்கிலும் உள்ள பிள்ளைகளின்கல்வி எவ்வளவு காலத்திற்குதான் பாதிக்கப்பட அனுமதிப்பது. எந்த வகையிலாவது பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வைக் காணுமாறு இலங்கை அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் நான் கோருகிறேன் என்றார்.

### சிங்கள- தமிழ் பாகுபாட்டை உணரமுடிந்தது

கே.பி.சோமலதா உரையாற்றுகையில் ஒற்றையாட்சி நாடு என அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், நாம் வடக்கிற்கு செல்வதற்கு விண்ணப்பித்து ஒரு மாதத்திற்குப்பின்னரே அனுமதி கிடைத்தது.

எமது குழுவில் யேசுதாசன்,றோஸ்மேரி ஆகியோர் தமிழர்கள் என்பதால் எம்மைவிட அவர்களிடம் கூடுதலாக கேள்விகள் கேட்கப்பட்டன. புஷ்பகாந்தியும் தமிழரா என்ற சந்தேகத்துடனேயே விசாரிக்கப்பட்டார். சிங்கள வருக்கும் தமிழருக்குமான பாகுபாட்டை எம்மால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக விவசாயம், மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளனர் இப்போது தெற்கிலும் அந்த நிலமை உருவாகி வருகின்றது என்பதை அவர்களுக்கு விளக்கினேன். நான் சார்ந்த மொனராகலை மாவட்டத்திலும் இப்போது

(02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்மையில் இனுவில் கலாயோதி நிலையத்தில் மாதாந்த பௌர்ணமி நிகழ்வின்போது இனுவையூர் இலட்சுமி புத்திரன் அவர்களின் நெறியாழ்கையில் இடம்பெற்ற "அன்னை நிலம்" நாடகம் பற்றிய ஒரு விமர்சனப்பார்வை



ஒரு சமூகப்பிரச்சனையை உழைக்கும் வர்க்கத்தின் வாழ்வாதாரமான நிலப்பிரச்சனையை மையமாகக்கொண்டு யதார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள கதையின் நேர்த்தி பாராட்டுக்குரியது. சமுதாயம் ஒன்றின் அதிமுக்கிய பிரச்சனையினை மையக்கருத்தாக எடுத்துக்கொண்டு அதனுருவாக்கம் மற்றும் வளர்ச்சிப்போக்கு என்பவற்றின் காரண காரியங்களை நாடக அரங்கில் வெளிச்சம் போட்டு காட்டிய விதம் அற்புதமானது அத்தோடு எந்தப்பிரச்சனையை எடுத்துக்கொண்டாலும் எல்லா பிரச்சனைகளையும் ஏதோ ஒரு வகையில் அரசியல் சக்திகளே ஆக்கிரமித்துள்ள இக்காலகட்டத்தில் அரசியல் சாயமே பூசப்படாமல் அரசியலை நுழைக்காமல் கதையினை நகர்த்தியுள்ளமையானது கதாசிரியரின் ஆற்றலுக்கும் திறமைக்கும் தலை வணங்க வைக்கிறது. ஆனாலும் கொலை தான் தீர்வு என்பதான நாடகத்தின்முடிவு உள்ளத்தின் ஒரு மூலையில் உறுத்தவே செய்கிறது.

**தொகுப்பு**
**தே.யோ.தவராஜா**

உண்மையாக உழைக்கும் சமூகமொன்றை தமது பணபலத்தாலும் வரட்டுக்கௌரவத்தாலும் படுகுழி பறித்து வீழ்த்தும் குள்ளத்தனத்தாலும் உய்ய விடாமல் அடக்கி மடக்கி அடிவருடி அபகரித்து ஏப்பம் விட முயலும் வெற்றிவேலர் போன்றவர்களுக்கு அரசியல் ரீதியாக மட்டுமன்றி சட்டங்கள்கூட துணை போகும் காலமிது என்பதால் இப்படியான வர்கள் இவ்வாறுதான் அழிக்கப்படவேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடுகள் இருந்தாலும் நாடகத்தின் முடிவு விவாதிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

இதில் பங்கெடுத்துக்கொண்ட கலைஞர்களைப்பற்றி கூறுவதானால் இவர்கள் இளங் கலைஞர்கள் என்றோ புதிய கலைஞர்கள் என்றோ கூறிவிட முடியாத அளவுக்கு அத்தனைபேரும் தத்தமது பாத்திரங்களில் அசத்தி இருக்கிறார்கள். நாடக நடிகர்களுக்கான ஒப்பனைகளில் நிறைய குறைபாடுகளை காணமுடிந்தது. இக்குறைபாடுகளுக்குள்ளும் அன்னை நிலம் பார்ப்போரை பிரமிக்க வைத்தது.

# 21 ஆம் நூற்றாண்டின் அரசியல், பொருளாதாரம்

(கடந்த இதழின் தொடர்ச்சி)

- K.T கணேசலிங்கம் -
அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

அத்தகைய அரசுடைமை வாதத்திற்கும் அரச சார உடைமை வாதத்திற்கும் அடிமைப்படும் உலகத்தை தயார் செய்வதற்காக முன்னிறுத் தப்பட்டுள்ள அரசியல் சார்ந்த உரிமைக் கோட்பாடுகள் இன்னோர்பக்க உதவியாக உள்ளன. மனிதஉரிமைகளும் சிவில் சமூக உரிமைகளும் பொருளாதார உரிமைகளும் சிறுவர் பெண்கள் உரிமைகளும் எழுத்திலும் உச்சரிப்பிலும் அயோக்கிய பொருளாதாரத் திற்கு துணையாகவுள்ளன. அத்தகைய அயோக்கியப் பொருளாதாரம் மனிதனின் உழைப்பை சுரண்டிய காலத்தின் வரலாற்றை முடிவுக்குக் கொண்டு வந்துடன் மனிதனை மனிதமே இல்லாதவனாக்கிய இயந்திரவடிவத் தினுள் நியமங்களை சரிசெய்வதற்கு வழி வகுத்துள்ளது.

அரசுகள் ஒவ்வொன்றும் சேர்ந்து உருவாக்கியுள்ள உலகம் ஆட்சியாளர்களுக் குரியதாகிவிட்டன. ஆட்சியாளரின் அடிப்படைகள் ஒரே நியமத்தைப் பிரதிபலிக்கின்றன. எங்காவது ஒரு சில ஆட்சியாளர்கள் விதி விலக்காக தோன்றுவார்கள். ஆனால், குறுகிய காலத்தில் தோற்றுப்போய்விடுவார்கள். காரணம் உலக நியமத்துக்குள் அவர்கள் தனித்து இயங்க முடியாதவலையமைப்பை அரசியல் பொருளாதாரம் கொண்டிருக்கிறது. அத்தகைய அரசியல் பொருளாதாரத்தின் இயங்கு விசை வளர்ந்த அபிவிருத்தி நாடுகளை மையப்படுத்தியுள்ளது. அவ்வகை நாடுகளின் கொள்கைகளையும், உற்பத்திகளையும் நுகர்வதே பிற தேசங்களின் அரசியல் பொருளாதார விருத்தியாகவும் இயங்கியல் விதியாகவும் மாறியுள்ளது. இவ்வகை இயங்கியல் விதியின் நியமத்தில் வர்த்தகம் உயர்தரப்புள்ளியாகக் கணக்கிடப்படுகிறது. அவ்வகை வர்த்தகமும் சுயமற்ற, இறைமையற்ற அரசுகளுடனான வர்த்தகமாக உருவாக்க மேலைத்தேசம் அதிகம் விரும்புகின்றது. அதுவே வரியற்ற, தடையற்ற வர்த்தகம் என உடன்பாடுகளையும் உத்தரவாதங்களையும் வரைந்துகொண்டு ஒருவகை ஏமாற்றத்தை கையாளுகின்றன.

அவ்வகைப்போக்கு மேற்குலகம் கிழக்குலகம் என்ற பிரிநிலையை முதன்மைப்படுத்திக் கொண்டிருப்பதுடன் மேற்கு மேற்கு முரண்பாட்டையும் மேற்கு கிழக்கு முரண்பாட்டையும் கிழக்கு கிழக்கு முரண்பாட்டையும் தீவிரப்படுத்தியுள்ளது. இவ்வகை நியமம் எதிர் முரணியம் என்ற பிந்திய இயங்கியல் விதிக்கூடாக நகர்த்தப்படுகின்றது. இதனை நியாயப்படுத்த தாராளவாதம், ஜனநாயக வாதம சுதந்திரம், சுதந்திர வர்த்தகம் என்றெல்லாம் அரசியல் நியமனத்தினை வீசி எறிந்து கொண்டு அயோக் கியத்தனமான திருட்டினை மேலை உலகம் பிரயோகித்து வருகிறது. வறுமை, வேலையின்மை, அறியாமை, மத இன பிரதேச மோதல்கள் பயங்கரவாதம் என்பவற்றை அகற்றிவிடும் அருமருந்தாக பொருளாதார உயர்வுபேசப்படுகிறது. இவ்வகைப்பேச்சு கடந்த இருபதாம் நூற்றாண்டு முழுவதும் உரைக்கப்பட்டு இப்போது இருபத்தோராம் நூற்றாண்டுக்கும் அதேசுலோகத்துடன் ஏமாற்றுத்தனம் பேசப்படுகிறது. அவ்வகை ஏமாற்றுத்தனம் சந்தைப் பொருளாதாரம் என்பதால் மறைக்கப்பட்டிருப்பதுடன் சந்தை நோக்கிய அரசியல், பொருளாதார வளர்ச்சி அடைந்து வருகிறது. சோஸலிசப் பொருளாதாரத்தை முதலாளித்துவப் பொருளாதாரம் [illegible] அதிகமான மாறுதல்களையும் புனைவுகளையும் ஏற்படுத்திக் கொண்டது.

சோசலிசம் பொருளாதாரம் என்பது பேசப்பட்ட மாதிரிக்குள் இயங்கமுடியாமல் போனதுக்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தடம் புரள்வுக்கும் சந்தை பிரதான காரணியாகவே விளங்கியது. சோஸலிச வாதிகளே சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய அமைப்பியல் மாற்றங்களை செய்ய விருப்புடையவர்களாகவும் அவ்வகை பொருளாதாரமே சுபீட்சமான நிலைக்கு வழிவகுக்குமெனவும் கருத்துக்களை முன்வைத்து மாற்றங்களை சோஸலிச அரசுகளுக்குள் மேற்கொண்டனர். அவ்வகை வடிவத்துக்குள் போக முடியாத சோஸலிச அரசுகள் தமக்குள்ளேயே ஒருவகை சந்தைப்பொறிமுறையை இருபதாம் நூற்றாண்டில் ஏற்படுத்தினர். அது பின்னர் படிப்படியாக சோஸலிச கொள்கையை விழுங்கியதுடன் முற்றாகவே முதலாளித்துவப் பொருளாதார சந்தைக்கு வழிவகுத்தது.

இவ்வகைத்தன்மையை சோசலிசம் எனக்கருதும் சோஸலிசவாதிகளும் அரசியல்வாதிகளும் உளளனர். அமெரிக்க அரசியல் பொருளாதார அறிஞர் ஜான் செனத் கால்ப்ரெஸ் கூறுவதுபோல் உலகம் முதலாளித்துவ சுளர்ச்சிக்குள் வேறு இயங்குவிசை ஏதுமற்றபோலிக்குள் இயங்கிக்கொண்டிருக்கிறது. மேலும் அவர் சந்தைப்பொருளாதாரம் பற்றிக்கூறுவது மிகப் பொருத்தமாக அமையும் நவீன முதலாளித் துவத்தின் கூறாக சந்தைப் பொருளாதாரம் திகழ்கிறது. இது உலகத்தவரால் மிக உயர்வாக நோக்கப்படுகிறது. கேடுவிளைவிக்கும் முதலாளித்துவத்தின் பொதுக்குணாம்சங்களான பாகுபாடு, பணம்தேடும்வெறி, செல்வத்தைக் குவிக்கும் பங்குச்சந்தை, சூதாட்ட வழி சமூக அக்கறையற்ற பொருளுற்பத்தி, இயற்கையை பேணும் உணர்வற்ற சுயநலம், வறுமை, யுத்தம் ஆகியவற்றை விளைவிக்கும் உற்பத்தி உறவு என்பன ஒழிக்கப்படவில்லை மாறாக காதுக்கினிய சொதல்லாடல் மூலம் மறைக்கப்படுகிறது என்பதை வெளிச்சம்போட்டுக்காட்டுகின்றது என்றார்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் என்பவள் சுமைதாங்கியா?



வளர்ந்த நாடுகளாயினும் சரி வளர்முக நாடுகளாயினும் சரி அங்கெல்லாம் பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே பார்க்கின்றார்கள். ஆட்சி அதிகாரம் ஆரம்பித்த காலம் முதல் இன்றைய நவீன காலம் வரை பெண்கள் எதிலுமே இரண்டாந்தர அங்கத்துவமாகவே பாரக்கப்படுகின்றாள்.

பெண்ணின் பங்களிப்பின்றி எந்த நவீன துறையும் வளர்ச்சி அடைந்ததாக சரித்திரம் இல்லை. ஆனால் பெண்ணின் சிந்தனையும், உழைப்பும் பிறரால் மதிக்கப்படுவதற்குப் பதிலாக சுரண்டப்படுகின்றது. அவர்களுடை சுயமான செயற்பாடுகளை கட்டிப்போட்டு குறுகிய வட்டத்திற்குள் தள்ளிவிடுகிறது. ஒரு நாட்டின் முதுகெலும்பாக பெண்ணே திகழ்கின்றாள். குடும்பம், சமூகம், நாடு என்ற மூன்று தளங்களிலும் பெண் தனது உழைப்பு சக்தியை ஆணைவிட மிக அதிகமாகவே செலுத்தி ஒட்டுமொத்த மனித சமுதாய வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணிக்கின்றாள் என்பது மறுக்கப்படாத உண்மையாகும். ஆனால், இந்த உண்மை இன்று வரைக்கும் பெரும்பான்மையானவர்களால் மறுக்கப்பட்டு வருகின்றது. அவளுக்கிருக்கக்கூடிய சமூகப் பெறுமானத்தை படித்தவர்கள் தொடங்கி பாமரர் வரைக்கும் உணர்ந்து பார்ப்பதுமில்லை. மதிப்பதுமில்லை. ஏன்? ஒரு பெண்ணால் கூட இந்த உண்மையை உணர்ந்து பார்க்க முடிவதில்லை. இதற்கு ஆணாதிக்க கருத்தின் தாக்கமே அடிப்படைக் காரணமாக இருந்து வருகின்றது.

பெண் என்பவள் ஒரு தாயாக, சகோதரியாக, மனைவியாக, மகளாக, பொது நலன் விரும்பியாக என பல்வேறு வடிவங்களில் தன் உறவைப் பலப்படுத்தி சமூக உறவை கட்டியெழுப்ப பெரும் பங்கு வகிக்கின்றாள். இந்த நிலையில் பெண்களுக்கு சுதந்திரம் என்று ஒரு பக்கம் சொல்லிக்கொண்டு மறுபக்கத்தில் அவளுடைய உரிமைகளும் சுதந்திரமும் ஆணாதிக்க கருத்தியல் சிந்தனை என்பவற்றால் சிதைக்கப்படுகின்றது. வாழ்க்கையில் மிக முக்கியமானது சுதந்திரம் ஒன்றுதான். அது பெண்களைப் பொறுத்தவரையில் பெரும் கேள்வியாக உள்ளது. மரபு ரீதியாக பெண் எதிர் நோக்கும் மூடத்தனங்கள் அடக்குமுறைகளைவிட சமகாலத்தில் நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கக்கூடிய யுத்த நெருக்கடியும் பொருளாதார சுமைகள் எல்லாமே பெண்களையே அதிகம் பாதிக்கின்றது. இதன் பின்னணியில் பெண்களின் பிரச்சனைகளை ஆழ்ந்து நோக்கினால் அவளின் துயரம் நிறைந்த உண்மைச் சம்பவங்கள் வெளியில் தெரியவரும். இதற்கு சான்றாக கிராமிய மட்டத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பப் பெண்ணையும் பார்த்தால் தெரிந்துகொள்ளமுடியும். இவர்கள் வாழ நிற்பந்திக்கப்படும் முறை பெண்கள் திருமணத்திற்குப் பின்னர் அடிமைகளே, அவர்கள் தியாகம் செய்யப் பிறந்தவர்கள் என புகழ்ந்து கூறி பெண்களை ஆணாதிக்கம் ஏமாற்றி வருகின்றது.

**த.வனஜா,**
**யோகபுரம்.**

சினிமா தொடக்கம் கலை இலக்கியங்கள் எல்லாம் பெண் அடிமைக்கருத்தையே பறை சாற்றுகின்றது. அன்றிலிருந்து இன்று வரையும் பெண்களை நவீன காலத்திற்கு ஏற்ப நவீன முறையில் கலாச்சாரம், பண்பாடு என்ற போர்வையில் ஒடுக்கு முறைக்குள் வைத்திருப்பதை உணரமுடிகிறது. பெண்ணின் அங்க அடையாளங்களை குறியிட்டு பல இலக்கியப்படைப்புக்கள் உருவாக்கப் பட்டுள்ளது. இது பெண்ணின் அழகைப் புகழ்கின்ற மாதிரி இருந்தாலும்கூட இதுவும் அவளின் சுதந்திரத்தை துணிவான சிந்தனையை சிறைப்படுத்துகின்றது. மறுபுறத்தில் இந்த முதலாளித்துவ உலகம் தமது இலாப நோக்கத்திற்காக பெண்களை போகப் பொருளாகவும், விளம்பரப் பொருளாகவும், திரைப் படக் காட்சிகளில் அரைகுறை ஆடைகளுடனும், சீரியல் மெகாத் தொடர்களில் அழுது கண்ணீர் வடிக்கும் ஒரு ஜீவனாகவும், சுமைதாங்கியாகவும். காண்பிக்கப்படுவதெலாம் பெண் இப்படிததான் இருக்கவேண்டும் இப்படித்தான் வாழவேண்டும் என்ற எண்ணத்தையும் கருத்தையும் திட்டமிட்டு வேகமாக விதைத்து வருகின்றது. ஒவ்வொரு பெண்ணும் இந்த உலகத்தை திரும்பிப்பார்க்க வேண்டும். ஆணாதிக்க கருத்தை தாங்கி நின்று செயற்படும் இந்த முதலாளித்துவ உலகம் பெண்களுக்கென்று ஏற்படுத்தி வைத்திருக்கும் இந்த அசிங்கமான நடைமுறையை மாற்றி அமைத்திட ஒன்றுபட்டு உழைத்திட வேண்டும்.

## கிராமிய உழைப்பாழர் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள்

பிரதேச செயலர் பிரிவு - வலி தெற்கு, உடுவில்.
கிராம அலுவலர் பிரிவு - J/208 புன்னாலைக்கட்டுவன் வடக்கு
கிராமத்தின் பெயர் - கப்பம்புலம்

கிராமம் பற்றிய ஆய்வு 2005ம் ஆண்டு 9ம் மாதம் 12,13 ஆகிய நாட்களில் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் இனங்காணப் பட்ட நாளாந்தம் கிராமிய உழைக்கும் வறிய மக்களை. ஆண்கள், பெண்கள் இருபாலாரையும் அங்கத்தவராக இணைத்துக்கொள்வதற்கான ஆரம்பக்கூட்டம் 23.11.2005 இல் இடம்பெற்றது. இதில் 10பேர் கொண்ட சங்கத்தின் கிளைக்குழு தெரிவுசெய்யப்பட்டது. அவர்களின் விபரம்

| இல | பதவி | பெயர் |
|---|---|---|
| 01 | தலைவர் | சந்திரன் - இராணி |
| 02 | செயலாளர் | சாந்தருபன் - மஞ்சுளாதேவி |
| 03 | பொருளாளர் | யூலியாஸ் - இரத்தினம்மா |
| 04 | உறுப்பினர்கள் | கணேசன் - அற்புதமலர் |
| 05 | " | தறுமு - தேவி |
| 06 | " | செல்லக்குட்டி - கிறிஸ்தம்மா |
| 07 | " | அன்ரன் - ஜெயச்சக்திரன் |
| 08 | " | செல்லக்குட்டி - ஞானமலர் |
| 09 | " | இராசலிங்கம் நேசமலர் |
| 10 | " | சந்திரகுமார் - றதனி |

ஆகியோர் தெரிவாகினர்.

## நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் விபரம்

| இல | திட்டம் | நடைமுறை | பயன்பெறும் பெற்றவர்களின் எண்ணிக்கை | நிதித்தொகை |
|---|---|---|---|---|
| 01 | வட்டியில்லாக்கடன் | சுழற்சிமுறை | 10 - 16 | 5000/=<br>7000/= |
| 02 | இடர்காலக் கொடுப்பனவு | 2006ஆம் ஆண்டு11க்கு பின் ஏற்பட்ட இடர்க்காலத்தின் போது மீழப்பெறும் கடனாக வழங்கப்பட்டது. | 31 பேர் | 3000/=வீதம் |
| 03 | மரண இழப்பீட்டு நன் கொடை | சங்கத்தின் அங்கத்தவராகி சேமிப்புத்திட்டத்தில் இணைநத ஒருவருக்கு மீழப்பெறாத திட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. | அழகநாதன் நிரமலர் | 3000/=வீதம் |

## மேற்குறித்த கிராமத்தின் தற்போதைய நிர்வாகிகளின் விபரம்.

| இல | பதவி | பெயர் |
|---|---|---|
| 01 | தலைவர் | யூட்ஸ் - கயேந்தினி |
| 02 | செயலாளர் | சிங்கராசா - சசிகலா |
| 03 | பொருளாளர் | சாந்தருபன் - மஞ்சுளாதேவி |
| 04 | உறுப்பினர் | பாக்கியநாதன் - ரவிக்குமார் |
| 05 | " | யுவானஸ் - அன்ரன்ஜெயச்சந்திரன் |
| 06 | " | தறுமு - தேவி |
| 07 | " | ஏட்வேட் - மேரிகஜேந்தினி |

கிராமத்தின் திட்டங்கள் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மணி நேர வேலை கோரும் தொழிலாளர்கள்

தொழிலாளர்கள் 8.மணிநேர வேலையும் அதற்கேற்ப கூலியும் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்துப்போராடி வெற்றியும் அடைந்து நூறாண்டுகளாகி விட்டது. ஆனால் இன்று தொழிலாளர்களே தமக்குவேலைநேரம் கூட்டிவழங்க வேண்டும் என்று கோரிக்கையை வைக்கிற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் நிலையானது தொழிலாளர்வர்க்கம் மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்கு தள்ளப்படுகின்ற உண்மையை புலப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் தமிழ்நாடு திருப்பூர் மாவட்டத்தில் ஆடைகள்தைக்கும் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் ஆண் பெண் இருபாலாரும் தமக்கு 12மணிநேர வேலை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர் இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய பொருளாதார கஸ்ரத்தை சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றோம் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இந்த நிலையை தற்போது 8 மணித்தியாலங்கள் உழைத்து எம்மால் தீர்க்கமுடியாமல் பாரிய கஸ்ரத்தை எதிர்கொள்கின்றோம். 12மணித்தியாலங்கள் மேலதிகமாக உழைத்தால் ஏற்பட்டுவரும் பொருளாதார கஸ்ரங்களை ஓரளவு சமாளிக்க முடியும் என்று கருத்து முன்வைத்துள்ளார்கள்.

இவர்களின் இக்கோரிக்கை நடைமுறைக்கு சாத்தியப்படக்கூடிய ஒன்றாக இருக்கலாம். ஏனெனில் எமதுவடக்குக் கிழக்கில் உள்ள வறிய விவசாயிகள் விவசாயக் கூலி உழைப்பாளர்கள், மீனவர்கள், இதர தொழிலாளர்கள் அடிப்படையில் தொழிலே இல்லாமல் தமது இருப்பையே தொலைத்து விட்டார்கள். இன்நிலையில் இவர்களுக்கு இருக்கக்கூடிய கஸ்ரத்தைப்போக்க தொழிலே இல்லாத நிலையில் கூடியநேரம் தொழில் செய்ய வாய்ப்பேது. இவர்களின் கஸ்ரங்களை சொல்லில் அடக்கிவிட முடியாது. அவர்களின் கஸ்ரங்கள் வழமையான நிலையிலிருந்து சற்று அதிகரித்துள்ளது. இது உழைக்கும் வறிய மக்களின் பொருளாதார நிலையின் தொடர்ச்சியும் வழமையானதும் என்றாலும்கூட வடக்குக்கிழக்கு உழைக்கும் வறியமக்களின் நிலையோடு ஒப்பிடுகையில் ஓரளவு சமாளித்துக்கொள்ள முடியும் என்றாலும் தொழிலாளர்கள் என்ற நிலையில் பொதுவான சிந்தனையையும் நடைமுறையையும் உருவாக்கிக்கொள்வது அவசியமானது. இது யதார்த்தமாக உருவாகும்.

## பட்டிக்காட்டான்

உலக முதலாளித்துவம் தான் எதிர்கொள்ளும் பல சவால்களையும் நிதி நெருக்கடிகளையும் சரி செய்து கொள்வதற்காக அதிவேகமான நிதிச்சுரண்டலை நடாத்துவதற்கான பொருளாதாரக்கொள்கையை கடைப்பிடித்து வருகின்றது. இதனால் உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் தொழிலாளர்கள் இதர வறிய மக்கள் எல்லோரும் இயந்திரத்தில் பிழிந்து எறியப்பட்ட சக்கையைப்போல் விரைவில் மரணத்தின் விழிம்புக்கு தள்ளிச்செல்லப்படுகின்றார்கள். அந்த அளவுக்கு வேகமான உழைப்புச்சுரண்டல் நிதி வசூலிப்பு ஆகியவற்றிற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இக்கொடுமையானது மூன்றாம் உலக வறிய நாடுகளிலேயே மிக அதிகமாக கவலைக்கிடமான முறையில் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு தொழிலாளர் மீதும் வறிய மக்கள் மீதும் திட்டமிட்டு பொருளாதார சுமைகளை சுமத்தும் முதலாளித்துவ நிறுவனங்கள்,தொழிற்சாலை நிர்வாகம் இவற்றுக்கெல்லாம் துணை நிற்கும் அரச இயந்திரங்கள் எல்லாமே தொழிலாளவர்க்கத்தை, வறிய மக்களை அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச்செலவுக்கு ஏற்ப 8 மணிநேர வேலைக்கு ஏற்ப சம்பள உயர்வைக் கோரிபோராடவிடாது தடுப்பதற்கான பல மார்க்கங்களை உருவாக்கிவிட்டு மக்களை ஏமாற்றிவரும் சக்திகள் உங்கள் கஸ்ரங்களுக்கு அதிக நேரம் உழைக்க வேண்டும் என்ற எண்னக்கருத்தை திட்டமிட்டு உருவாக்கி வருகின்றது. அதில் வெற்றியும் பெற்றுவிட்டது. அதன் வெளிப்பாடே திருப்பூர் ஆடைத்தொழிளாளர்களின் கோரிக்கையாகும்.

இந்த வெற்றிகள் நிரந்தரமானவையல்ல ஏனெனில் முதலாளித்துவத்திற்கு இன்னும் அதிகமதிகமாக தேவைப்படும் நிதிப்பசிக்கு போதுமான சுரண்டல் இல்லாத பட்சத்தில் அது தொழிலாளர் வர்க்கத்தினதும் வறிய மக்களினதும் இருப்பையே மொத்தமாக சிதைக்கும் கைங்கரியத்தில் ஈடுபடும். இது தொழிலாளவர்க்கம் வறிய மக்கள் அனைவரும் விழித்துக் கொள்ளும் காலத்தை உருவாக்கும்.




'இதயநாதம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தலைமையுரையை என்.இன்பம் நிகழ்த்துவதையும், வரவேற்புரையை மு.சந்திரகலாவும், வெளியீட்டுரையை யாழ்.தினக்குரல் முகாமையாளர் ஆர்.சி.நடராஜா அவர்களும், மதிப்பீட்டுரையை வதிரி இராஜேஸ்கண்ணன், தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலம் ஆகியோரும், பொ.வசந்தி நன்றியுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# மக்கள் பார்வையில் இதய நாதம்

மனிதனுடைய வளர்ச்சிக்கு இதயம் தான் அவசியம் இதயம் இல்லையென்றால் மனிதன் வாழமுடியாது. அதேபோல் உழைப்பவர் இயங்க முடியாவிட்டால் உலகமே இயங்க முடியாது. என்ற கருத்தை முன் வைத்து எங்களுடைய தொழிலாளர்களுக்கான அமைப்பு இப்படியொரு பத்திரிகையை வெளியிடுவதை நினைத்துப் நானும் ஒரு தொளிலாளி என்றவகையில் பெருமைப்படுகிறேன்.

இதுவரை காலமும் எமது கிராமிய உழைப்பாளர் களுக்கென்று ஒரு பத்திரிகையோ சங்கமோ இல்லை. ஆனால் கிராமிய உழைப்பாளர் சங்கம் தொழிலாளர்களுக்காக தன்னுடைய சேவையை செவ்வனே செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளும் அதேவேளையில் சங்கத்தின் செயற்பாடுகளை செய்வதற்கு எமது இளவாலை பொல்வத்தை கிராமத்தை தேர்ந்தெடுத்ததையிட்டு மிகுந்த சந்தோசம் அடைகின்றேன்.

**நாகமுத்து சரவணமுத்து**

இதயநாதம் சஞ்சிகைக்கான
தரமான ஆக்கங்கள் (கவிதை. சிறுகதை. கட்டுரைகள்). செய்திகள்.
புகைப்படங்கள் என்பன
வாசகர்களிடமிருந்து
எதிர்பார்க்கப்படுகின்றன.
வந்துசேரவேண்டிய முகவரி:

**இதயநாதம், சேச்அருகாமை,**
**குப்பிளான் தெற்கு,**
**புன்னாலைக்கட்டுவன்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமை

இன்று உலகம் முழுவதும் சிறுவர் உரிமை தொடர்பாக பல ஆய்வுகள் கட்டுரைகள் வெளி வந்துகொண்டிருந்தாலும் மாற்றத்திற்கான முழுமை இன்னும் கிடைக்கவில்லை. சிறுவர் துஸ்பிரயோகம் இருவகைப்படுகிறது.

1. அறிந்தே துஸ்பிரயோகப்படுத்தல்.
2. அறியாமல் துஸ்பிரயோகத்திற்குட் படுத்தல்.

இரண்டையும் ஒப்பிடும்போது முதலாவதாக குறிப்பிட்டது இரண்டாவது நிலையிலும் பார்க்க குறைவு என்றே சொல்லலாம் ஏனெனில் நாம் அறிந்துசெய்வதைவிட அறியாது செய்வதுதான் அதிகம். இன்று நாட்டில் உள்ள சிறுவர்கள் அனைவருமே ஏதாவது ஒரு வகையில் பாதிப்புக்குள்ளும் தாக்கத்திற்குள் ளும் ஆளாகிறார்கள். அது வளர்ச்சியடைந்த நாடாக இருந்தாலும் சரி வளர்ச்சியடையாத நாடாக இருந்தாலும் சரி குடும்பங்களை எடுத்துப் பார்த்தால் வசதிபடைத்தவர்கள் என்றாலும் சாதரண பாமரகுடிமகன் என்றாலும் சரி இதில் வேறுபாடு கிடையாது. ஆனால, இன்றைய சூழலில் சிறுவர் துஸ்பிரயோகம் என்பது தடுக்கவோ மறுக்கவோ முடியாத ஒன்றாக உருவெடுப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இதற்கு நேரடியாக உட்படுவது கிராமிய உழைக்கின்ற வறிய கூலி மக்களின் பிள்ளைகளாகும். அவர்கள் இதில் பல வடிவம் பெறுகிறார்கள். வெளியிலே குழந்தைத் தொழிலாளர்களாக வீட்டில் அவர்களுக்கு கீழுள்ள பிள்ளைகளைப் பராமரிக்க பெற்றோருக்கு உதவி என்ற போர்வையில் அவர்களின் அன்றாட வேலைகளில் பங்கெடுப்பதில் குடும்பச் சுமையை தாங்கிக்கொள்வது போன்றதாகும். இன்று எமது நாட்டில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் கொடூர யுத்தம் வறிய மக்களின் பிள்ளைகளைத்தான் அதிகம் பாதிக்கின்றது. அகதிமுகாம் வாழ்க்கை, உணவு, உடை, சுகாதாரம் இது எதுவுமே அவர்களுக்கு உரிமையோடு கிடைதத தில்லை. நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். அவர்களின் உரிமைகளில் எங்கே தவறுகின்றோம். இது பெற்றோரின் கடமை மட்டுமல்ல சமூகத்தில் வாழுகின்ற ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகும்.

யா ழ வி



தோட்டத்தில் வெங்காயம் வெட்டும் சிறுவர்கள்

அவர்களுடைய உரிமைகளை வலியுறுத்தி குரல்கொடுக்கின்ற அமைப்புக்கள்கூட அவர்களின் துஸ்பிரயோகத்தைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுத்ததாக தெரியவில்லை. சிறுவர் துஸ்பிரயோகம் தடுக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கான உரிமை தானாக கிடைக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை. குழந்தைத் தொழிலாளர் குடும்பத்துக்காக வருமானம் ஈட்டினாலும் அவர்களுடைய உழைப்பும் உரிமையும் முதலாளி வர்க்கத்தால் சுரண்டப்படுகிறது. சிறுபராயம் முடிந்து வயது வந்ததும் வெளியே பிடித்துவிடப்படுகிறார்கள். காரணம் 18 வயதுக்குப் பின் ஒரு தொழிலாளி தொழிற்சங்கத்தில் சேரும் உரிமையைப் பெறுகின்றான். இதன்மூலம் இவனால் சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக முதலாளித்துவ சமூகம் இத்தகைய கைங்கரியத்தை துணிந்து செய்கின்றது.

அந்த வெற்றிடத்துக்கு வேறு குழந்தை தொழிலாளர்கள் சேர்க்கப்படுகிறார்கள். வெளியேறிய வாலிபர்கள் வேறு தொழிலோ சுயமான சிந்தையோ இன்றி சமூக சீரழிவுகளில் ஈடுபடுகிறார்கள். இது தொடர்ச்சியாக நடந்து வரும் சம்பவங்களாகும். கிராமிய வறிய மக்களுக்கு பிள்ளைகளின் நலன்களில் போதிய அறிவு இன்மையும் இதற்கு ஒரு காரணமாகும். முதலில் நாம் எங்கு நிற்கின்றோம். இதற்கான தடையை எங்கு போட வேண்டும் என்பதை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். இன்று நாம் அறியும் ஒவ்வொரு சம்பவமும் உயிரை உறைய வைக்குமளவுக்கு இருக்கின்றன. அதையெல்லாம் செய்வது யார்? அன்றைய குழந்தைகள் இன்று வாலிபர்கள், யுவதிகள். அன்று நாம் எமது சந்ததிக்கு செய்த அநீதி அவர்களுக்கு சரியான வழி காட்டத்தவறியது மூத்த சமூகம். ஆகவே, இனிவரும் சந்ததியின் வழியாவது நல்லதாக இருக்கும் எம்மைச் சுற்றி எது நடந்தாலும் அது நாமே தேடிய நல்லது கெட்டதாகத்தான் இருக்கும்.

சிறுவர்கள் வெறும் களிமண் போன்றவர்கள். நாம் பிடிக்கும் உருவமாக அவர்கள் தோற்றம் பெறுவார்கள். ஆகவே, சிறுவர் உரிமைக்கு குரல்கொடுக்கும் நாம் அவர்கள் துஸ்பிரயோகத்துக்கு ஆளாகாமலும் பார்த்துக்கொள்வதும் எமது ஒவ்வொருவருடைய கடமையாகும். சிறுவர் உரிமைகள் தொடர்பாக ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முன்வரவேண்டும்.

## கோப் சிற்றி

நாட்டில் தீவிரமாக யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது மிகவேகமாக அபிவிருத்தி என்ற தோரணையில் என்னென்னமோ எல்லாம் இடம பெறுகிறது. இதில் அண்மையில் குடாநாட்டில வேகமாக திறக்கப்பட்டுவரும் கோப்சிற்றியும் ஒன்று. ஏற்கனவே இருக்கக்கூடிய வர்த்தக மையங்களில் பொருள்வாங்க பணத்திற்கு திண்டாடுகின்றோம். இருக்கும் பணத்திற்கு பொருள் மலிவாக வாங்க வழி இல்லை இந்த நிலையில் கோப்சிற்றி எமக்கு என்னசெய்யப்போகிறது என்று ஒருசாரார் கேள்வி தொடுக்கின்றனர் பெருமூச்சுவிட்டபடியே.

## 21ஆம் நூற்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் ஏமாற்றப்படுவது தெரியாது ஏமாற்றப்படுகிறோம். போலிகளை பொருத்த மற்றவற்றை அரசுகளும் ஆட்சியாளர்களும் சந்தைகளில் வாங்கிக்குவிக்கின்றனர். அவற்றை நுகர்வதால் கேடுஏற்படும் என்ற நிலைக்குப்பின்பும் நுகர்வாளன் நுகர்வதை தவிர்க்கமுடியாதுள்ளான். அதுமட்டுமல்ல அத்தகைய நுகர்வுக் கலாச்சாரத்திற்கு அடிமையாகி விடுகிறான். அதிலிருந்து மீள முடியாத கொடுமைக்குள் அகப்படுகின்றான். இதனை ஒவ்வொரு அரசாங்கங்களும் மாற்றி ஊக்குவிக்கின்றனவே அன்றி அதனை நிராகரிக்கவில்லை. அப்படியாயின் ஏன்? எப்படி? சந்தைப்பொருளாதாரம் உலகப்பொருளாதாரமாக மாறியது. சந்தையை நிர்ணயிக்கும் அரசியல் காரணி எது? சந்தைப்பொருளாதாரத்தின் மாதிரிகள் எவை? *(தொடரும்)*

## உழைப்பாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடு தொடர்பாக முழுமையாக எனக்கு தெரியாது. ஏன்றாலும் கூட இன்றைய சூழலில் உழைப்பாளர்களை மதிப்பவர்களைவிட உழைப்பாளர்களை நசுக்குபவர்களே அதிகம் இருக்கின்றனர். அதேவேளை என்னுடைய பின்னனியை உங்களுக்கு சொல்ல வேண்டியவராக இருக்கிறேன்.

நான் 1990ஆம் ஆண்டு வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தேன். எங்களுடைய சொந்த இடத்தைவிட்டு வெளியேறி இன்றைக்கு 20வருடங்கள் ஆகிவிட்டன. எங்களுடைய மக்கள் அனைவரும் ஒரு கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மீன்பிடித்தொழிலாளர்கள் இவர்கள் அனைவருமே தொழிலில் சிறந்தவர்கள். இவர்கள் இன்றைக்கு தொழில் செய்யமுடியாமல் சின்னாபின்னமாக எத்தனையோ நலன்புரி நிலையங்களில் முடங்கிப்போயுள்ளனர்.

எங்களுடைய கிராமிய உழைப்பாளர்களின் நிலையைச் சொல்வதற்கு யாரும் இல்லை. எல்லாரும் சொல்லளவில் சொல்லலாம். செயலில் எதுவும் இல்லை. இந்த உழைகின்ற மக்களுக்காக யாருமில்லை அவர்களிடம் உள்ளதை சுரண்டுவதை தவிர வேறெதுவும் இல்லை.

மேலும் சர்வதேச ரீதியில் உழைகின்ற மக்களுக்காக அமெரிக்காவை எதிர்த்து சோவியத் ஒன்றியம் போராடி வல்மை பெற்று வல்லரசாக ஒருகாலம் இருந்தது. இதை சகித்துக்கொள்ளமுடியாத அமெரிக்கா சோவியத் ஒன்றியத்தை பலகூறுகளாக உடைத்தது. இது சர்வதேச அளவில் தொளிலாளர் சமூகத்துக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ந்து உரையாற்றுகையில், இடம் பெயர்ந்த மக்களுக்கு அவர்கள் இடம் பெயர்ந்த பொழுது 1262ருபா பெறுமதியான நிவாரனம் 1990ஆம் ஆண்டு வளங்கப்பட்டது. இன்றைக்கும் அதேஅளவான காசுப் பெறுமதிக்குத்தான் நிவாரனம் வழங்கப்படுகின்றது. இதையொரு மனிதன் செய்வானா? என்ற கேள்வியும் இவ்வுரையின்போது எழுப்பப்பட்டதுடன் இன்றைய பொருளாதார விலையேற்றத்தால் இவை அவர்களுக்கு போதுமானதாக இல்லை. இதற்கு உழைப்பாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவதில்தான் நாம் வெற்றி காணமுடிம் என்றார்.

மேலும், பத்திரிகை வெளியிடுவது சாதாரண விடயமல்ல. ஆனால், இவர்களுடைய முயற்சியால்தான் இந்த இதயநாதம் வெளியிடப்படுகின்றது. இந்தப்பத்திரிகையை மக்கள் வாசிக்கும் போதுதான் எமக்கு வெற்றி இந்தப் பத்திரிகையைப் பொறுத்தவரை எல்லாவகையிலும் ஒழுங்காக்கப்பட்டுள்ளது. இப்பத்திரிகையானது கிராமிய உழைப்பாளர்களுக்கு நல்லதொரு விடிவினை ஏற்படுத்தும் என்று கூறி இறுதியாக வாழ்த்துரையுடன் தமது உரையை நிறைவு செய்தார்.

இப்பத்திரிகை யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தினரால் - 2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org